உ

சிவமயம்.

சுப்பிரமணியபுரம்

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிபேரில்

# வண்ணத்தாழிசை விருத்தம்.

இஃது

பூவுற்றகுடிநகரம்

சு. வை.

மீனாட்சிசுந்தரஞ்செட்டியாரால்

இயற்றி,

சிதம்பரம்

பச்சையப்பாயில்கூல் தமிழ்உபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ

சிவராமஞ்செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

ஷை சுப்பிரமணியபுரம்

த. வீ. தம்பாசெட்டியார் சகாயத்தால்

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரண அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1915வரு மேமீ 22உ.

OFFICE OF THE REGISTRAR OF ... 28 MAY 1915 MADRAS

171335

உ

சிவமயம்.

சுப்பிரமணியபுரம்

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிபேரிற்

# வண்ணத்தாழிசை விருத்தம்.

## விநாயகர் துதி.

O26138.211 SP
N15

### வெண்பா.

பூவார்சரவணத்துப்போந்தருளுஞ்சண்முகனைப்
பாவார்துதிநாயேன்பாடுதற்கு—மாவாழும்
பேர்மகிமைசேர்சுப்பிரமணியமாபுரம்வாழ்
கார்மதமாயானைமுகன்காப்பு.

சித்தகன்னியென்னுந்திருப்பதியில்வாழ்வீர
சத்திவிநாயகனற்றாழ்பரவி—பத்தம்
பனிரெண்டோடாறுமுகப்பண்ணவன்மேற்பாவை
யினிமையுடனேபுனைவேனின்று.

வேதாகமந்துதிக்கும்வேலவனைவெற்பரையன்
மாதாகமன்னுதற்கண்வந்தோனைச்—சீதா
பதியின்மருமகனைப்பண்ணவர்கள்போற்று
நிதியைப்பணிவேனிதம்.

### சிதம்பரம் ம-ா-ா-ஸ்ரீ

## சிவராமஞ்செட்டியாரியற்றிய சாற்றுக்கவி.

சீராருஞ்சுப்பிரமண்யபுரமமர் செவ்வேடனக்குச் சிந்தையுற்ற, வேராருமருத்தியோடுபாமாலை புனைந்தளித்தானெழிலார்விண்டோய், காராரும்பொழில்சூழும்பூவார்த்தகுடிநகரங்கணிக்கவாழ்வோன், பேராருமீனாக்ஷிசுந்தரனும் பாவலர்தம்பெருமன்றனே.

## நூல் வண்ணத்தாழிசை விருத்தம்.

நித்தன்றனதத்தத்துறுநிதியேநிறைமதியே
        நேசத்தொடுபூசிப்பவராசைக்கினியானே
அத்தமொருபத்தோடிரண்டானேயிருமானு
        ருகேயுறமயில்வாகனத்தாரோகணிப்பானே
நத்தனயனித்தம்பணிநாதாவிருபாதா
        நளினத்தவள்கொழுநற்குநயப்பார்மருகோனே
புத்தாரமுதனையாயருள்புரிசுப்பிரமணிய
        புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (1)

கண்ணாயிரமுடையானிவர்கரிதந்தவணங்கின்
        கச்சைப்பொருதழகார்முலையிச்சித்தணைமார்பா
பண்ணார்மொழியுமையாடருபாலாவுயர்சீலா
        பட்சத்துடனடியார்களைரெட்சித்தருள்வோனே
தண்ணாரணிமுடிமாமுகத்தானுக்கிளையோனே
        தந்தாய்வரந்தந்தாளெனைச்சமயமிதுசமையம்
புண்ணீர்வடிவேலாவருள்புரிசுப்பிரமணிய
        புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (2)

மன்றாடி தன்மகனே கருமாலின்மருமகனே
வள்ளிக்குயின்மொழிமாதைமணந்தேமகிழ்வோனே
கன்றால்விளவெறிமாயவனருளால்வருகமலன்
கதிர்மாமுடிமிசைகுட்டுபுகாவற்சிறைவைத்தோ
யுன்றாளெனதகமுச்சியு ளுய்ப்பாயருள்வைப்பா
யுயர்கோகனமுகமாறுடையுரவோய்புனைகுரவோய்
பொன்றாரணிமார்பாவருள்புரிசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (3)

அறுமீன்றனவருமாமுதயின்றாய்விடமயின்றா
னங்கத்துறுமடமான்மடியமருங்குமரேசா
குறுமாமுனிபணியுங்குரைகழலாய்மிகவெழிலாய்
குறமாதிடைத்தினைமாவினைக்கொண்டேயயின்றோனே
மறமேறியதகுவோர்களைமாய்த்தாய்புகழேற்றாய்
மறையாகமவடிவாகியமன்னாவெனதன்னாய்
பொறிமாமயிலுடையாயருள்புரிசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (4)

சங்கத்தியினிடைநின்றதோர்தடமாமரமதனைச்
சாடத்தனதுருவங்கொடுசமரேறியசூர
னங்கத்தினையிருகூறுசெய்தாகாயமதேகி
யழகார்நதியாடிக்கரமமர்சத்திகொள்படையாய்
துங்கப்பரிமளனீபமென்றோங்கற்புனைவோனே
துணையாகியநவவீரர்கடொழுமம்புயபாதா
புங்கத்தவர்மறைகற்றவருரைசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (5)

கற்றோர்கள்விருப்போடுனுங்கனியேநவமணியே
கங்காதரனங்கத்துறுங்கன்னிக்கருமகவே
யற்றோர்களுக்கருள்செய்திடுமப்பாவுனையொப்பா
ராரத்தியணிந்தானுதலக்கத்தினில்வந்தோ
யுற்றாருனையன்றிப்புவியுள்ளோர்களினுளரோ
வுன்னைத்தினமெல்லாமெனதெண்ணத்தினினுறவே
பொற்றாளெனதகம்வைத்தருள்புரிசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (6)

கண்ணேகணின்மணியேவிரிகதிரேகதிரொளியே
கண்டேகண்டுரசமேகற்பகாவேவயதன்பூவே
பண்ணேபண்ணினிசையேப்பசுப்பயமேயதன்சுவையே
பத்தர்க்கினியானேயவர்சித்தத்துறைவோனே
விண்ணேவிண்ணினுறைவோர்தொழுவீராதிபத்தாரா
விதிசெய்திடுந்தொழில்செய்துயர்விமலாகரகமலா
புண்ணேயுறுபடையாயருள்புரிசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (7)

உறியேறியேயிடைமாதர்களுயர்பாறயிரனையோ
டுலகுண்டவன்மருகாசமனுயிர்கொன்றவல்விரகா
மறியேறியகரனுக்குயர்மனுவின்பொருளுரைசெய்
மகவேயருமறையேபெருமானேயருளோனே
கறுவேறியகஜமாமுகனுடனுமுறைவிடமுங்
கண்டாயிருகூறாயுனைவென்றாரெவர்வீரா
பொறியெறியசிகியாயருள்புரிசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (8)

171335
600 005

## வண்ணத்தாழிசைவிருத்தம்.

நல்லாரகமகமாயுரைநாதாவுயர்மே[illegible]
ஞாலத்தவர்மேலுற்றவர்கிழுற்றவர்முதலாய
பல்லாயிரமண்டந்தனிலுள்ளாரும்விழுந்தே
பணியுஞ்சினகரமேவியபதியேவிருநிதியே
எல்லாருமுடியாய்கரமீராறுகளுடையா
யிருதேவிகளருகேயுறவேறுஞ்சிகியுடையாய்
புல்லாரொடுகல்லார்களுமில்சுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (9)

வங்கக்கடலுலகுக்கொருமணியாகியமணியே
வாளுளியைவாளுளவேவைத்தாய்புகழ்பெற்று
யங்கத்தொருகனிவைத்தவனருளுங்குமரேசா
வருணக்கிரியானேமுதலடியார்புனைகவிதைத்
துங்கத்தொடையாய்க்கொண்டணிதொல்லோய்மீனாட்சி
சுந்தரன்புனைபாமாலையைச்சுகமாய்நினைந்தணிவாய்
புங்கத்தவமுளதேசிகருரைசுப்பிரமணிய
புரமேவியகருணாகரபுனிதாகுகவேளே. (10)

## விருத்தம்.

---

எத்தலங்களினும் விழுப்பமிக்குடைய விடமெனக்கருதியோவலது, பத்தியினுயர்ந்தவணிகர்களுரையும்பதியென்றெண்ணியோவறியேம், மத்தகக்கண்ணின்வந்தவன்சுப்ரமண்ணியபுரத்தினிலமர்ந்தான், சத்திவேலவனைக்கண்ணுறில்வினைகடங்குறுதோடிடுந்தானே.

ஸ்ரீசுப்பிரமணியசுவாமிபேரிற்

## கலித்துறை.

மாணான்முகன்றிருமூம்வள்ளிமணாளனைவானவர்கள்
சேனாபதிதனைச்சூரசம்மாரதினமதனில்
பூநாறுசோலைபுளசுப்ரமண்யபுரமதனில்
வேனொருகன்னியரோடுங்கண்டென்வினைவியந்ததுவே.

## விருத்தம்.

சுப்ரமண்யபுரத்திலமர்குகவேண்மென்
மீனாட்சிசுந்தரநாயகன்
செப்பியபாமாலையினையச்சிட்டிப்
புவிக்குதவிசெய்தான்மன்னே
தப்பறுநற்சுப்ரமண்யபுரத்தான்தம்
பாவணிகத்தனவான்பின்னே
னிப்புவியிலிசைபடைத்தோன்
சாமிநாதன்னெனப்பேரெடுத்தகோவே.

வண்ணத்தாழிசைவிருத்தம்
முற்றிற்று.

171335